# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 24/2016** **நாள் :28/10/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

***அனைவருக்கும் இனிய தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்***

நடந்து முடிந்த மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாட்டில் மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளை மையமாக வைத்து இரண்டு கட்ட போராட்டத்திற்கு அறிவிப்பினை வெளியிட்டோம்.1. 04.10.2016 மின்வாரிய தலைமையக முற்றுகை, 2. 15.10.2016 அன்று திட்டமட்ட ஆர்ப்பாட்டம், என்று இருவகைப்படுத்தி போராட்ட அறிவிப்புக்களைச் செய்தோம்.

போராட்டத்தின் தயாரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற போது உள்ளாட்சி தேர்தல் அறிவித்த காரணத்தினால், அதாவது எந்த தேர்தல் அறிவித்தாலும் நிர்வாகம் முடங்கிப் போய் கிடக்கின்ற இக்காலகட்டத்தில் நாம் அறிவித்த முற்றுகைப் போராட்டத்தின் நாட்களை மாற்றியமைப்பது சம்மந்தமாக யோசித்து கொண்டிருக்கும் போதே போனஸ் பேச்சுவாத்தை அதையொட்டி அறிவிப்பு, அந்த அறிவிப்பும் நாம் எதிர்ப்பார்த்த வகையில் அமையாமல் ஒப்ந்த தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டதை கண்டிக்கின்ற விதமாக தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அறைகூவல் விட்டு நுாற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொள்ளக்கூடிய கண்டன இயக்கத்தை நடத்தி முடித்துள்ளோம்.

27.09.2016 அன்று நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் நாம் அறிவித்த இரண்டுகட்ட போராட்டத்திற்கு பின்னர் ஓரிரு, கோரிக்கைகள் மீது சாதகமான நடவடிக்கையும், உள்ளாட்சி தேர்தல் போன்றவைகள் குறுக்கிட்டதையும் கணக்கில் கொண்டு நாம் ஏற்கனவே திட்டமிட்ட தலைமையக முற்றுகைப் போராட்டத்தை 08.11.2016 அன்று நடத்துவது என்று முடிவு செய்தோம்.

இதற்கிடையில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் மீது வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டி தொடர்ச்சியாக முயற்சி எடுத்தோம். அதில் ஒரு கட்டமாக 17.10.2016 அன்று வாரிய தலைவரிடம் மூன்று கோரிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினோம். 1. களப்பிபரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் காண வேண்டும் என்பதில் சென்ற வாரியக்கூட்டத்தில் கொண்டு சென்ற போது அதன் மீது முடிவு

காணாமல் நிறுத்தி வைத்துள்ளதையும் குறிப்பிட்டு அடுத்து நடக்கும் வாரிய கூட்டத்தில் விளக்கம் கொடுத்து ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டி வலியுறுத்தினோம். வாரியத் தலைவரை பொறுத்தவரையில் உடனடியாக நடக்கும் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறுவதில் சிரமம் உள்ளது என்றும், அடுத்து நடக்கின்ற கூட்டத்தில் ஒப்புதல் பெறலாம் என்று சொன்ன போது அதை மறுத்து 26.10.2016 அன்று நடைபெறும் வாரியக் கூட்டத்திலேயே ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினோம். வாரியத்தலைவரும் முயற்சிப்பதாக கூறினார். ஆனால் 26.10.2016 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் இப்பிரச்சனை கொண்டு செல்லப்படவில்லை. இதனை பார்க்கும் போது இப்பிரச்சனையை தீர்ப்பதில் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதை அறிய முடிகிறது.

கணக்கீட்டாளரிலிருந்து கணக்கீட்டாய்வாளராக பதவி உயர்வு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மூன்றாண்டு பணி அனுபவ காலத்தை இரண்டாண்டாக குறைத்து அதன் அடிப்படையில் தகுதிகாண் அறிக்கை பெற்று பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாம் வலியுறுத்தினோம் சென்ற வாரியக் கூட்டத்தில் இப்பிரச்சனை எழுப்பட்டு இதன் மீது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை ஆனால் வாரியம் தற்போது கணக்கீட்டாளர்கள் மத்தியில் தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அது கூட மூன்றாண்டு பணி அனுபவம் முடித்தவர்களுக்கே பதவி உயர்வு வழங்கும் வகையில் தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது நாம் வைத்த கோரிக்கைக்கு முற்றிலும் மாறுதலான நடவடிக்கையாக உள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மின்வாரியத்தில் புதிய அலுவலகங்கள் துவங்கப்பட்டும் அவ் அலுவலகங்களில் பணியாற்ற பகுதிநேர ஊழியர்கள் பதவிகளை அனுமதித்து நிரப்பிட வேண்டும் என்ற கோரிக்கையின் மீது 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டு விவரங்கள் கேட்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு பதிலாக அந்த கோரிக்கையின் மீது காலதாமதம் செய்யும் வகையில் திரும்பவும் விவரங்கள் கேட்கப்பட்டுள்ளது.

பொதுவாக நாம் எழுப்பிய பிரச்சனைகளின் மீது தீர்வு காண்பதற்கு பதிலாக காலம் கடத்தும் போக்கினையே கடைபிடிக்கிறது. இவைகளை எல்லாம் கணக்கில் கொண்டு 08.11.2016 அன்று முற்றுகைப் போராட்டத்தை நடத்த முடிவு செய்திருந்தோம். இதற்கிடையில் தசரா பண்டிகை, தீபாவளி பண்டிகை போன்றவைகள் குறுக்கிடுகின்ற காரணத்தால் நாம் நினைக்கின்ற அளவிற்கு ஊழியர்களைத் திரட்டுவதில் உள்ள சிரமத்தை உணர்ந்து, அந்த இயக்கத்தை ஊதிய உயர்வு கோரிக்கை போராட்ட பிரகடன ஆர்ப்பாட்டமாக மாற்றிஅமைக்கப்பட்டுள்ளது.

08.11.2016 அன்று மாலை 4.00 மணி அளவில் ஊதிய உயர்வு கோரிக்கை போராட்ட பிரகடன ஆர்ப்பாட்டத்தில் சென்னை இருமண்டலங்கள், வேலூர், விழுப்புரம் மண்டலங்களில் அதிகமான ஊழியர்களை கலந்து கொள்ளச் செய்வது, மற்ற அனைத்து மின் வட்டக்கிளைகளிலிருந்தும் ஒரு கிளைக்கு 5 தோழர்கள் என்ற முறையில் கலந்து கொண்டு ஊதிய உயர்வு கோரிக்கை புத்தகத்தை வெளியிடும் இயக்கமாக மாற்றுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கோரிக்கை வெளியீட்டு கூட்டத்தில் சி.ஐ.டி.யூ.வின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன் கலந்து கொண்டு இக்கோரிக்கை புத்தகத்தை வெளியிடுவார்கள். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இயக்கத்தில் கீழ்கண்டவாறு ஊழியர்களை திரட்ட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

| | | | ஊழியர்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை வடக்கு மண்டலம் | - | 500 |
| 2. | சென்னை தெற்கு மண்டலம் | - | 500 |
| 3. | விழுப்புரம் மண்டலம் | - | 600 |
| 4. | வேலூர் மண்டலம் | - | 400 |

இதர அனைத்து மின் வட்டக்கிளைகளிலிருந்தும் 5 நபர் என்ற முறையில் கலந்து கொள்வது. நவம்பர் 19,20 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள மாநில செயற்குழுவில் முற்றுகைப் போராட்டத்திற்கான தேதி நிர்ணயிக்கப்பட்டு, முற்றுகைப் போராட்டத்தை நடத்தி கோரிக்கைகளை வென்றடைவது. 08.11.2016 அன்று ஊதிய உயர்வு கோரிக்கை வெளியீட்டு பட்டியல் நிகழ்ச்சியினை வெற்றிகரமாக்கிட அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**உறுப்பினர் சேர்ப்பு**

2016 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பில் பெரிய தொய்வு என்பது உள்ளது. இதுவரையில் 15,000 உறுப்பினர்களுக்கான ஈவுத்தொகையே மாநில மையத்திற்கு வந்துள்ளது என்பதை கணக்கில் கொண்டு உறுப்பினர் சேர்ப்பை வேகப்படுத்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**போனஸ் நன்கொடை**

போனஸ் நன்கொடை பெறுவதற்கு ஊழியர்கள் மத்தியில் விருப்பம் பெறும் விண்ணப்பத்தில் கையொப்பம் பெறுவது என்பது நடந்து கொண்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. சில கிளைகள் 1000-த்தையும் தாண்டியதாக தகவல்கள் வந்துள்ளன. போதியகால அவகாசம் உள்ளதையும் கணக்கில் கொண்டு அதிகமான ஊழியர்கள் மத்தியில் கையொப்பம்பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள



**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்